**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி

2024 ம் வருடம் செப்டம்பர் மாதம் 24 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவராண்டு 2055 ஸ்ரீகுரோதி வருடம் புரட்டாசித் திங்கள் 08 ம்நாள்

**இடைநிலை மனு எண். 312/2023-ல்**

**அசல் வழக்கு எண். 52/2021**

1. பாப்பையன்.
2. பூங்கொடி. .... மனுதாரர்கள் /பிரதிவாதிகள்

**// எதிர்//**

திருஞானம். .... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.K.கோபாலகிருஷ்ணன், B.A., B.L., அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.உதயகுமார், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

மனு உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151 ன்படி தாக்கல் செய்து, அசல் வழக்கு எண்.52/2021 மற்றும் அசல் வழக்கு எண்.53/2021 ஆகியவற்றை இணைந்து ஒரே விசாரணையாக நடத்த அனுமதி வழங்கி உத்தரவு பிறப்பிக்கக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம் :-**

இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள் ஆவார்கள். இம்மனுவின் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கு எதிர்மனுதாரர்/வாதி மனுதாரர் மற்றும் அவரது சகோதரி மீதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதே அசல் வழக்கில் கண்டுள்ள சொத்தை பொறுத்து மனுதாரர்களால் எதிர்மனுதாரர்/வாதியை பிரதிவாதியாக கண்டு, இந்நீதிமன்றத்தில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு எண்.53/2021 தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. அசல் வழக்கில் எதிர்மனுதாரர்/வாதியை குறுக்கு விசாரணை செய்வதற்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இந்த அசல் வழக்கு சொத்தும், அசல் வழக்கு எண்.53/2021 சொத்தும் அசல் வழக்கு சொத்தும் ஒரே சொத்தாகும். மேற்படி தரப்பினர்களும் ஒரே நபர்களாவார்கள் என்பதால் அசல் வழக்கு நடவடிக்கையை அசல் வழக்கு எண்.53/2021 உடன் இணைந்து நடத்தினால் துரிதமாக முடிவு காண முடியும் என்பதால், அசல் வழக்கு எண்.52/2021 மற்றும் அசல் வழக்கு எண்.53/2021 ஆகியவற்றை இணைந்து ஒரே விசாரணையாக நடத்திட அனுமதி அளித்து உத்தரவு பிறப்பிக்கும்படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-**

மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுவானது நிலைநிற்கத் தக்கதல்ல. எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப் படுகின்ற சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்கள்.

இரண்டு வழக்குகளிலும் பிரச்சனைக்குரியது ஒரே சொத்து தான். இரண்டு வழக்குகளிலும் உள்ள வாதி, பிரதிவாதி இருவரும் ஒரே நபர் தான். இரண்டு வழக்குகளும் தற்போது விசாரணைக்கு வந்துவிட்டது. இரண்டு வழக்குகளிலும் தனித்தனியாக ஆவணங்கள் தாக்கல் செய்து சாட்சி விசாரித்தால் தேவையற்ற அலைச்சலும், செலவீனங்களும், தனித்தனியாக ஆவணங்கள் தாக்கல் செய்ய வேண்டிய நிலையும் ஏற்பட்டுவிடும். மேற்படி எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள வழக்கோடு சேர்த்து அசல் வழக்கு எண்.52/2021 மற்றும் அசல் வழக்கு எண்.53/2021 வழக்கையும் சேர்த்து கூட்டு விசாரணை நடத்தி அசல் வழக்கு எண்.52/2021 வழக்கில் சாட்சியங்களையும், ஆவணங்களையும் விசாரிக்க கோரி எதிர்மனுதாரர் எதிருரையை தாக்கல் செய்துள்ளார்.

**4) இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.**

**5) <u>தீர்வு</u>:-**

**1.** இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

**2.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.** தாவா சொத்தில் பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ வாதியின் அமைதியான சுவாதீன அனுபவத்தை எந்த வகையிலும் இடையூறு செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்/வாதியால்

அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அசல் வழக்கில் மனுதாரர் / வாதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்ட நிலையில் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு மற்றும் எதிருரை ஆகியவற்றை பரிசீலித்து வகையில், இவ்வழக்கின் இரு தரப்பினர்களுக்குமிடையே இதே தாவா சொத்து தொடர்பாக அசல் வழக்கு எண்.53/2021 வழக்கானது எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் மனுதாரர்/வாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி, வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. மேற்கண்ட இரண்டு வழக்கிலும் புல எண்.284/12 சொத்து தொடர்பாகவும், இதர சொத்துக்கள் தொடர்பாகவும் வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. மனுதாரர் இரண்டு வழக்குகளையும் ஒன்றாக சேர்த்து ஒரே விசாரணையாக நடத்திட இம்மனு தாக்கல் செய்துள்ளார்.

**5.** எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில் இரண்டு வழக்குகளையும் சேர்த்து விசாரணை நடத்தி சாட்சியங்களையும், ஆவணங்களையும் விசாரணை செய்வதற்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பரிசீலணைகளின் அடிப்படையில் இம்மனுவை அனுமதிப்பதினால் இரண்டு தரப்பினருக்கும் எவ்வித இழப்பும் ஏற்படப்போவதில்லை. இரண்டு வழக்குகளையும் ஒரே விசாரணையாக நடத்துவதால் கால விரயம் ஏற்படுவதை தடுக்க முடியும்

என்பதாலும், ஒரே நேரத்தில் இரு வழக்குகளுக்கும் தீர்வு காண முடியும் என்பதாலும், நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

6) **முடிவாக**, இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (24.09.2024) அவையறியப் பகரப்பட்டது.

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.09.26 10:38:11 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி .

**குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**

**இருதரப்பிலும்** : இல்லை

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.09.26 10:38:19 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி .